முருகப்பெருமான் துணை

**மகான் தொண்டரடிப்பொடி ஆழ்வார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

28.11.2023, செவ்வாய்கிழமை

1. அழியாமை வரம் பெற்று
அகிலத்தார் அனைத்து பேருமே
அழியாமை வரம் பெற வேண்டி
அருள் ஞானம் தருகின்ற அரங்கா
2. அரங்கமகா ஞான தேசிகனே
அப்பனே உன் பெருமை கூறி
வரங்களென சோபகிருது தேள்திங்கள்
வல்லமைபட வியதிகதி குசன் வாரம்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 12 ம் நாள், 28.11.2023, செவ்வாய்கிழமை)
3. வாரமதில் அறிவுரைஆசியை
வழங்குவேன் தொண்டரடிப்பொடி ஆழ்வாரும்
பாரதமே பண்புற உரைப்பேன்
பரிபக்குவ மேல்நிலை கண்டிட
4. கண்டிட அரங்க ஞானிகாட்டும்
கந்தப் பெருமான் வழிபாட்டை
உண்டான சரவண சோதி ஏற்றி
உயர் வழிபாடாகச் செய்துவர
5. வருகவே தெய்வ அனுகூலமாக
வந்தடையும் மனபக்குவம்
தருகின்ற குணம் வளரவே
தயவாக அரங்கன் காட்டுகின்ற
6. காட்டுகின்ற அன்னதான வழியை
கருணை பிறக்கும் சக்தியாக
வாட்டமற ஏற்று சேவை ஆற்ற
வணங்கி தருமத்தில் உதவி

7. உதவிட தருமவான் எனும்
உயர்நிலை தேறி இனிதே
பூதலம் காக்கின்ற வண்ணம்
புண்ணிய பலமாக பெருகிநிற்கும்

8. நிற்கவே சுத்த சன்மார்க்க
நீதி நெறி உள் அடங்கிட
அற்புதம் ஆன்மா தெளிவும்
அறிவில் முதிர்வும் இறைவழியை

9. இறைவழியை அடைய குருவழியே
ஏகாந்தம் எனும் பூரணத்துவம்
குறைவிலா கண்டுத் தெளிவுறும்
கும்பகம் பூரகம் முழுமைகண்டு

10. கண்டுமே தன் எண்ணமெல்லாம்
கந்தவேலன் மேலான ஓட்டமாக
உண்டாகும் வாசி வசம்
உருவாகும் அழியாமை எனும் பலம்

11. பலம்பெற பாதுகாப்புத் தரும்
பரிபக்குவவான்கள் நிறுவிடும்படி
வளம் தரும் ஞான ஆட்சி மலரும்
வழங்கிய அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—